©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 44] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 5, 2025
ஐப்பசி 19 விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு 2056.

# பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண்.103, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M2)த் துறை, நாள்: 11 செப்டம்பர் 2025.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 63/1948) 112ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் மேற்கொள்வதற்காக வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115–ஆம் பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2 இந்த அறிவிக்கை. ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு திருத்தம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் யாதொரு நபரிடமிருந்து பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், இருபடிகளில் அதனை 47/1, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600032 இல் உள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் வாயிலாக ‘அரசு செயலாளர். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை 600 009’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், 84B–ஆம் விதியில், துணை விதி (6).க்குப் பதிலாக. பின்வரும் துணைவிதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"(6) ஒரு தொழிற்சாலையின் அனுபோகதாரர் இரவுநேர முறைப்பணியில் பணியமர்த்தப்படும் பெண் தொழிலாளர்கள் பத்து பேருக்குக் குறையாமல் இருப்பதையும். மேற்பார்வையாளர்களில்/ முறைப்பணி பொறுப்பாளரில்/முதலாளில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாக இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். மேலும் இரவுநேர முறைப்பணிகளில் பணியாற்றுவதற்கு விருப்பமுள்ள பெண் தொழிலாளர்களிடமிருந்து எழுத்துவடிவில் ஒப்புதல் பெறப்பட வேண்டும்;"

*[அரசாணை (நிலை) எண்.109, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M2)த் துறை, நாள்: 22 செப்டம்பர் 2025.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 63 / 1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 4 ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (6)–இல், இரண்டாம் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர். பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

“மேலும், பட்டாசு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், நபர்களின் உயரளவு எண்ணிக்கையானது. 1884 ஆம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (மத்தியச் சட்டம் 4 / 1884) மற்றும் 2008 ஆம் ஆண்டு வெடிபொருட்கள் விதிகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் வரம்பு எண்ணிக்கையை விட பதினைந்து விழுக்காடு அதிகமாக இருத்தல் வேண்டும்.”

K. **வீர ராகவ ராவ்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.